**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1 -ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி கிரேடு 3 பெஞ்ச்கிளார்க் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>செந்தில்குமார்</td><td>தொழில் :</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம் :</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி :</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**20.2.2024 OS No.8/2020 வா.சா.1** செந்தில்குமார் **ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. தாவா வழக்கை யார் யார் தாக்கல் செய்துள்ளோம் என்றால் நான், என் அம்மா, என் தங்கைகள் 3 பேர் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம். 1-ம் வாதி மாரியம்மாளின் கணவர் பெயர் கந்தையா என்றால் சரிதான். மாரியம்மாளுக்கும், கந்தையாவிற்கும் பிறந்தவர்கள்தான் 2 முதல் 5 வாதிகள் என்றால் சரிதான். கந்தையாவுடன் பிறந்தவர்கள் 1.கருப்புசாமி, 2) வேலுச்சாமி என்றால் சரிதான். இவ்வழக்கின் 6-ம் பிரதிவாதியாக உள்ள வேலுச்சாமி என்பவர் என் அப்பாவுடன் பிறந்தவர் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி வசந்தா கருப்புசாமியின் மனைவி என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகள் கருப்புசாமி மற்றும் 1-ம் பிரதிவாதியின் மக்கள் என்றால் சரிதான். நான் மேற்படி விபரங்களை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம்.

2. கருப்புச்சாமி, கந்தையா, வேலுச்சாமி ஏற்கனவே 1985-ம் ஆண்டு பாகம் செய்துகொண்டார்களா என்றால் பாகம் செய்துகொண்டார்கள். மேற்படி பாகத்தில் கந்தையா 2-ம் நபராக உள்ளார் என்றால் சரிதான். 16.3.1985ம் தேதிய பாகப்பத்திரத்தில் தாவா சொத்து என் அப்பா பாகத்திற்கு ஒதுக்கப்படவில்லை என்றால் அது பூர்விக சொத்தாகும். 16.3.1985ம் தேதிய பாகப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிராதின் சொத்துவிபரத்தில் சொத்தின் கதவுஎண் குறிப்பிடப்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் புல எண்.277/13 ஆகும். அந்த வீட்டின் நீளம், அகலம் தெரியுமா என்றால் 16க்கு 20 அடி ஆகும்.

3. தாவா வீடு தற்போது என்ன வகையான வீடாக உள்ளது என்றால் தற்போது சென்டிரிங் போட்ட வீடாக உள்ளது. அந்த வீட்டின் வடக்கே யார் உள்ளார் என்றால் ராமுத்தேவர் உள்ளார். அந்த வீட்டின் தெற்கே என்ன உள்ளது என்றால் வாசல் உள்ளது. அந்த வீட்டின் மேற்கே சுப்பையாதேவர் காலியிடம் உள்ளது. அந்த வீட்டின் கிழக்கே கருப்புசாமி வீடு உள்ளது. அந்த வீட்டின் நீளம் அகலம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. கருப்புசாமி வீட்டிற்கு கதவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் வழக்கு நடந்ததாக சொல்லியிருப்பதில் வழக்கு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

2004-ல் நடந்தது.   நான் வழக்கு நடந்ததாக சொல்லியிருப்பதில் வழக்கு முடிந்த தேதி தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.   நான் என்ன வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் வீட்டிற்குதான் தாக்கல் செய்தேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.